மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திறந்தவெளி சிறைச்சாலையை மாவட்ட ரீதியில் அமைக்க வேண்டுமென்று எண்ணுவது கூடாது தான். அப்படி அரசு எண்ணவில்லை. உறுப்பினர்கள் அத்தகைய கேள்வி கேட்டதால், பதில் சொல்ல வேண்டியது என் கடமையாகப் போய் விட்டது. ஆனால், அரசினுடைய கொள்கையைப் பொறுத்த வரையில், கைதிகள் 3 ஆண்டுகளுக்கு சிறையில் இருக்கிறவர்கள், திருந்த வாய்ப்புப் பெற்றவர்கள் அல்லது திருந்த வேண்டிய சூழ்நிலையில் உள்ளவர்கள், திருந்துவதற்கான வாய்ப்பு உள்ளவர்கள் போன்றவர்களுக்கெல்லாம் இது போன்ற திறந்த வெளி சிறைச்சாலைகளை அமைத்து, அவர்களுக்கு ஆங்கு திருந்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித்தர வேண்டும். குற்றம் செய்தால் அவர்கள் தண்டனை பெற்று, சிறையில் இருந்து, பின்னர் வெளியே வந்த பிறகு, விடுதலை பெற்ற பிறகு, சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில், He is looked down by the society என்ற காரணத்தினால், அவர்களுக்கு சுய வேலை வாய்ப்பு திட்டத்தின் அடிப்படையில் அவர்களுக்கு வாய்ப்புத் தரவேண்டும் என்ற முறையில், தற்போது சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகிறபோது, திறந்த வெளி சிறைச்சாலைகள் அமைப்பது உகந்தது என்று கருதி, அந்த அடிப்படையில் அதற்கான நடவடிக்கையை எடுத்து வருகிறோம்.

வேதாரண்யம் உப்பளத்தில் உப்பு உற்பத்தியை அதிகரிக்கும் திட்டம்.

238 (*வினா எண் 19566) திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், வேதாரண்யம் உப்பளத்தில் உப்பு உற்பத்தியை அதிகரிக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்து வருகின்றதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு உப்பு நிறுவனம் தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை தாலுக்காவிலுள்ள வேதாரண்யம் சதுப்பு நிலப் பகுதியின் மேற்கு கோடியிலுள்ள மரவக்காடு - வடக்காடு கிராமங்களில் 2875 ஏக்கர் நிலப் பரப்பை உப்பு உற்பத்திக்காக மேம்படுத்தி வருகிறது. இந்த உப்புத் தொழிற்சாலை 1982ஆம் ஆண்டு மேம்பாட்டு வேலைகளுடன், உப்பு உற்பத்தியையும் ஆரம்பித்துள்ளது. 1983 ஆம் ஆண்டில் இத் தொழிற்சாலையில் சுமார் 5226 டன்கள் உப்பு உற்பத்தியையும் ஆரம்பித்துள்ளது. உப்பு உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது.

1984 மார்ச் 9]

(முற்பகல் 9.40.)

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் உப்பளப் பகுதியிலே 60,000 ஏக்கர் நிலம் உப்பு உற்பத்திக்குத் தகுதியாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் மேற்குக் கோடியில் இருக்கிற 5,000 ஏக்கர் நிலங்கள் தான் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அதுவும் நல்ல உப்பாக இல்லையென்று சொல்கிறார்கள். எனவே, அதை விரிவுபடுத்தி, கிழக்குப் பகுதியிலே உப்பை உற்பத்தி செய்வதற்கு முயற்சி செய்தால் நல்ல உப்பை உற்பத்தி செய்ய முடியும் என்று கருதப்படுவதால், அந்தக் கிழக்குப் பகுதியிலும் உப்பு உற்பத்தி செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஆயப்பட்டு ஆய்வின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யத்தைச் சுற்றியும் தனியார் உப்பு உற்பத்தி செய்து வருகிறார்கள். அவர்களுக்கு ஏதாவது வேறு வசதிகள் செய்யப்படுகின்றனவா ? அங்கே சாலை வசதிகள் இல்லாததால் உப்பை எடுத்துச் செல்ல முடியாமல் இருக்கிறது. அதையும் உப்பு வாரியத்தின் மூலம்மேற் கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உப்பு வாரியம், தனியார் உப்பளங் களிலே சாலை வசதி செய்து தர முடியாது. ஆனால் ஒட்டு மொத்தமாக உப்பளத் தொழில் மேம்பாட்டுக்கு என்ன, என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அது குறித்து அரசு ஆரா யும்.

ஆலங்குளம் சிமெண்ட் ஆலையின் கழிவுப் புகையால் பாதிக்கப்படும் விவசாய நிலங்கள்.

239—*வினா எண். 19599—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் சிமெண்ட் ஆலையின் கழிவுப் புகையால் அந்த ஆலையை அடுத்துள்ள விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டு விவசாயிகள் அதிகமான நஷ்டத்திற்குள்ளாகியுள்ளது அரசுக்குத் தெரியுமா ?